
இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 338 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆடி 02 – செவ்வாய்க்கிழமை 18 ஜூலை 2023 – திருச்சி ★ ★ 12 + 20 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 338 : Thiruvalluvar Year - 2054 - Aadi 02 - Tuesday 18 July 2023 - Trichy ★★ 12+20 Pages ₹ 5.00


## திருமதி சோனியா காந்தி விருந்து அளித்தார்!

# பெங்களூருவில் எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட 24 கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

**பெங்களூர், ஜூலை 18-**

**கர்நாடகாவின் தலைநகரான பெங்களூருவில் 24 எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் பா.ஜ.க.வை வீழ்த்தும் வியூகம் குறித்து ஆலோசனை நடத்தினர். இக்கூட்டத்தில் திருமதி. சோனியா காந்தி, முதல்வர்கள் மு.க.ஸ்டாலின், மம்தா பானர்ஜி, நிதிஷ்குமார், ஹேமந்த்சோரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நேற்று இரவு, கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கு சோனியா காந்தி அவர்கள் விருந்து அளித்தார்.**

மக்களவைத் தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல், மே மாதத்தில் மாதத்தில் நடைபெறுகிறது. தேர்தலை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றன. மக்களவைத் தேர்தலுக்கு முன்பாக ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கர், தெலுங்கானா, மிசோரம் ஆகிய 5 மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல் நடைபெறுகிறது. இது அரையிறுதிப் போட்டியாக கருதப்படுகிறது.

கடந்த மாதம் 23ஆம் தேதி பீகாரின் தலைநகரான பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் கூட்டினார். இக்கூட்டத்தில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி, தி.மு.க.. ஐக்கிய ஜனதாதளம். ராஷ்டிரீய ஜனதாதளம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி, உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனை உள்ளிட்ட 16 கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்றனர்.

இதற்கு அடுத்த கூட்டத்தை இமாச்சலப்பிரதேசத்தின் தலைநகரான சிம்லாவில் நடத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. ஆனால் கனமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக இத்திட்டம் கைவிடப்பட்டது. ஜெய்ப்பூரில் அல்லது ராய்ப்பூரில் நடத்துவது குறித்து பரிசீலிக்கப்பட்டது. இறுதியாக கர்நாடகாவின் தலைநகரான பெங்களூரில் இக்கூட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**ம.தி.மு.க. - வி.சி.க. பங்கேற்பு!**

இந்தக் கூட்டத்தில். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகம் (ம.தி.மு.க.), கொங்கு தேச மக்கள் கட்சி (கொ.தே.ம.க.), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (வி.சி.க.), புரட்சிகர சோசலிஸ்ட்கட்சி" (ஆர்.எஸ்.பி.) அனைத்து இந்திய பார்வர்டு பிளாக், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐ.யூ.எம்.எல்.), கேரள காங்கிரஸ் (ஜோசப்), கேரள காங்கிரஸ் (மணி) ஆகிய 8 கட்சிகள் பங்கேற்றன. இக்கூட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்றத் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்கள் கலந்து கொண்டார்.

**கார்கே கடிதம்!**

இதனிடையே, காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சிகளின் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சிகளின் இரண்டாவது ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்குமாறு முக்கியமான தலைவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். அதில் அவர் கடந்த மாதம் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் அழைப்பின் பெயரில் ஜூன் 23-ஆம் தேதி பாட்னாவில் நடந்த முதல் கூட்டத்தினை நினைவு கூர்ந்துள்ளார்.

அக்கடிதத்தில் கார்கே அவர்கள் கூறியிருப்பதாவது :

நமது ஜனநாயக கொள்கைகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்து விவாதிக்க முடிந்ததாலும், அடுத்த பொதுத் தேர்தலை ஒற்றுமையாக எதிர்கொள்ள ஒரு மனதான முடிவு எட்டப்பட்டதாலும் முதல் கூட்டம் வெற்றிகரமாக அமைந்தது. அந்த விவாதத்தை தொடர்வதும், நாம் உருவாக்கிய ஒற்றுமையை கட்டி எழுப்புவதும் மிகவும் முக்கியமானது என்று நான் கருதுகிறேன். நமது நாடு சந்திக்கும் சவால்களுக்கான தீர்வுகளுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம். அதன் தொடர்ச்சியாக, ஜூலை 17ஆம் தேதி பெங்களூருவில் நடக்கும் கூட்டத்திலும் அதனைத் தொடர்ந்து மாலை 6 மணிக்கு நடக்கும் இரவு விருந்திலும் கலந்து கொள்ள உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டம் 18ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மீண்டும் தொடங்கும். உங்கள் அனைவரையும் பெங்களூர் கூட்டத்தில் சந்திக்க ஆவலாக உள்ளேன்.

இவ்வாறு கார்கே அவர்கள் கூறியுள்ளார்.

இவ்விருந்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், பீகார் முதல்வர் நிதிஷ்குமார், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன் உள்ளிட்டோர் பங்கேற்கிறார்கள். திரிணாமுல் காங்கிரஸ் சார்பில் மம்தா பானர்ஜியின் மருமகன் அபிஷேக் பானர்ஜி, மூத்த எம்.பி. டெரிக் ஓ பிரையன் ஆகியோர் விருந்தில் பங்கேற்றனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.07.2023) முகாம் அலுவலகத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதியரசர் "சத்தியதேவ் அவர்களின் நினைவாக சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் "சத்தியதேவ் லா அகாடமியை (Sathyadev Law Academy) தொடங்கி வைத்து, இலட்சினையை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னோசன்ட் திவ்யா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகளின் உறுப்பினர் செயலர் சுதன், அகாடமியின் இயக்குநர் ஓய்வுபெற்ற நீதியரசர் கே.சந்துரு, ஓய்வு பெற்ற நீதியரசர் கே.பி. சிவசுப்பிரமணியன், நடிகர் சூர்யா, 2D நிறுவன முதன்மை செயல் அலுவலர் இராஜ்சேகர் கற்பூர சுந்தரபாண்டியன், திரைப்பட இயக்குநர் த.செ. ஞானவேல் ஆகியோர் உடனிருந்தனர்.

## சட்டம் பயிலும் மாணவர்களுக்கு

# வழிகாட்டும் "சத்தியதேவ் லா அகாடமி"!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஜூலை 18-*

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.07.2023) முகாம் அலுவலகத்தில், சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதியரசர் "சத்தியதேவ்" அவர்களின் நினைவாக சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் "சத்தியதேவ் லா அகாடமி"யை (Sathyadev Law Academy) தொடங்கி வைத்து, இலட்சினையை வெளியிட்டார்.

இந்தியாவில் சட்டத்தொழில் புரிவது சாதாரண மக்களுக்கு எளிதான காரியம் அல்ல. அப்படிப்பட்ட வழக்கறிஞர் தொழிலில் குறிப்பிட்ட ஒரு சிலரே ஆதிக்கம் செலுத்தி வந்தனர். "வழக்கறிஞர் சட்டம்" 1961ஆம் ஆண்டு இயற்றப்பட்ட பின்னரே வழக்கறிஞர் தொழில் ஒருமுகப்படுத்தப்பட்டு சட்டப்படிப்பு பரவலாக்கப் பட்டது.

சட்டக்கல்லூரி மாணவர்கள் தேர்வில் இடஒதுக்கீட்டு சமூக நீதி ஏற்பட்ட பின்னரே, பல்வேறு சமூகங்களிலிருந்தும் வழக்கறிஞர்கள் இத்தொழிலுக்கு வரத்தொடங்கினர். அதிக அளவிலான சட்டக்கல்லூரிகள், சட்டப் பல்கலைக்கழகங்கள் வந்த பிறகும், சட்டப்படிப்பு சாதாரண குடும்பத்திலிருந்து வரும் மாணவர்களுக்கு சவாலாகவே உள்ளது.

இதனை கருத்தில் கொண்டு "சத்தியதேவ் லா அகாடமி", அரசு சட்ட கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த அகாடமியில் சட்ட நிபுணர்கள்/சட்ட ஆசிரியர்களைக் கொண்டு சட்டக்கல்லூரி பாடத்திட்டத்தின் அடிப்படையில், மாணவர்களுக்கு பாடங்களைக் காணொலியில் பதிவு செய்யப்பட்டு "யூடியூப்" வலைதளத்தில் பதிவேற்றப்படும். மாணவர்கள் அவற்றை கட்டணமின்றி பதிவிறக்கம் செய்து படித்து பயன்பெறலாம். பாடத்திட்ட காணொலி தயாரிப்பதற்கான நிதியை ஜெய்பீம் படத் தயாரிப்பாளர், நடிகர் சூர்யா அவர்களின் "2D எண்டர்டெயின்மெண்ட்" நிறுவனம் வழங்கிட உள்ளது.

இந்த "சத்தியதேவ் லா அகாடமி"யை தொடங்கி வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக மாணவ, மாணவியர்களின் தனித் திறமைகளை அடையாளம் கண்டு அதனை மேலும் ஊக்குவித்து, அவர்கள் அடுத்து என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், எப்படி படிக்கலாம் என்று வழிகாட்டி வருகிறது. அது மட்டுமின்றி, ஆண்டுக்கு 10 இலட்சம் இளைஞர்களை படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு "நான் முதல்வன்" திட்டம் செயல்பட்டு வருகிறது.

**திறன் பயிற்சி வகுப்புகள்!**

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 463 பொறியியல் கல்லூரிகளில் 4,72,972 மாணவர்களும், 861 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 8,51,338 மாணவர்களும் பயனடைந்துள்ளனர். பொறியியல் கல்லூரிகளில் 2022-23ஆம் ஆண்டு "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 1,15,682 இறுதியாண்டு மாணவர்களுக்கு Simens, Dassault, Microsoft, IBM, Cisco Autodesk, L&T, TCS, Infosys, NSE போன்ற நிறுவனங்கள் மூலமாக AR/VR, Artificial Intelligence, Machine Learning, Full Stack, Data Analytics, Electric Vehicle Design, Cyber Security, Mutual Funds, Capital Markets, Fintech, Block Chain, Digital Marketing மேலும் இது போன்ற 70க்கும் மேற்பட்ட திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் "நான் முதல்வன்" திட்டத்தின் மூலமாக 2,48,734 இறுதியாண்டு மாணவர்களுக்கு நிறுவனங்கள் மூலமாக, திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, இப்பயிற்சிகளின் மூலமாக மாணவர்கள் அதிகபட்சமாக ஆண்டுக்கு 40 இலட்சம் வரையிலான ஊதியத்தில் வேலைவாய்ப்புகளை பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் "நான் முதல்வன்" திட்டத்தில் பயின்ற மாணவர்களுக்காக நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் 65,034 பொறியியல் கல்லூரி மாணவர்களும், 83,223 கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் வேலைவாய்ப்பினை பெற்றுள்ளனர்.

எனவே, சட்டம் பயிலும் மாணவர்களுக்கு "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்க "சத்தியதேவ் லா அகாடமி" நிர்வாகிகளை முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி இன்னோசன்ட் திவ்யா, தமிழ்நாடு மாதிரி பள்ளிகளின் உறுப்பினர் செயலர் சுதன், அகாடமியின் இயக்குநர் ஓய்வு பெற்ற நீதியரசர் கே.சந்துரு, ஓய்வு பெற்ற நீதியரசர் கே.பி. சிவசுப்பிரமணியன், நடிகர் சூர்யா, 2D நிறுவன முதன்மை செயல் அலுவலர் இராஜ்சேகர் கற்பூர சுந்தர பாண்டியன், திரைப்பட இயக்குநர் த.செ.ஞானவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 3600 யூனிட்டுக்கு மேல் வர்த்தகப் பிரிவுப்படி மின்கட்டணம் என

# சமூக வலைதளங்களில் பரவும் தகவல் உண்மையில்லை!

## தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 18-

வீட்டு மின் இணைப்புகளில் ஆண்டுக்கு 3 ஆயிரத்து 600 யூனிட்டுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தினால் வர்த்தக பிரிவின் படி கட்டணம் வசூலிக்கப்படும் என சமூக வலைதளங்களில் பரவும் தகவல்கள் உண்மையில்லை என தமிழ்நாடு மின்சார வாரியம் அறிவித்துள்ளது.

தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் வீடு, குடிசை, கைத்தறி, விவசாய இணைப்புகள் என மொத்தம் 2 கோடியே 67 லட்சம் மின் இணைப்புகள் உள்ளதாகவும், அதில் வீட்டு மின் இணைப்புகள் 2 கோடியே 42 லட்சம் என்றும், மின் கட்டணம் 2 மாதங்களுக்கு ஒரு முறை கணக்கிடப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சமூக வலைதளங்களில் ஆண்டுக்கு 3ஆயிரத்து 600 யூனிட் மின்சாரம் பயன்படுத்தினால் வீட்டு மின் இணைப்புகளுக்கு வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு வசூலிக்கப்படுவது போல வர்த்தக கட்டணமாக வசூலிக்கப்படும் என தகவல்கள் பரவி வருவதாகவும், இந்த தகவல்களில் உண்மை இல்லை என்றும் மின்சார வாரியம் அறிவித்துள்ளது. மேலும், தமிழ்நாட்டில் ஆண்டுக்கு 3 ஆயிரத்து 600 யூனிட்டுக்கு மேல் 4 சதவீதம் பேர் மட்டுமே மின்சாரம் பயன்படுத்துகிறார்கள் என்றும் மின்சார வாரியம் தெரிவித்துள்ளது.

## டெல்லியில் கடும் வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான

# ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ.10 ஆயிரம் நிதியுதவி:

## டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவிப்பு!

*புதுடெல்லி, ஜூலை 18-*

டெல்லியில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் கனமழையை அடுத்து, யமுனை ஆற்றில் வரலாறு காணாத அளவில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. கடந்த சில நாட்களாக அபாய அளவை கடந்து நீர்மட்டம் உயர்ந்து காணப்படுகிறது.

யமுனை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், நொய்டா ஆற்றங்கரை பகுதிகளில் 550 ஹெக்டேர் வரையிலான நிலங்கள் நீரில் மூழ்கி உள்ளன. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் புலம் பெயர்ந்து சென்று உள்ளனர். 8 கிராமங்கள் பாதிக்கப்பட்டு உள்ளன. கால்நடைகள், நாய்கள், முயல்கள், வாத்துகள், சேவல்கள் உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகள் மீட்கப்பட்டு உள்ளன.

45 ஆண்டுகளில் இல்லாத வகையில், யமுனை ஆற்றில் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வரும் சூழலில், அபாய அளவை விட 2 மீட்டர் உயரம் என்ற அளவில் 207.68 மீட்டராக உயர்ந்து உள்ளது. இதனை தொடர்ந்து, வெள்ளத்தில் சிக்கி தவிக்கும் ஆயிரக்கணக்கான மக்களை மீட்கும் பணியில், தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். யமுனை ஆற்றில் வெள்ளநீர் வடிந்து விடும் என்று கூறப்பட்ட போதிலும், கனமழை பெய்ய கூடும் என்றும் எச்சரிக்கை விடப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் நேற்று முன்தினம் வெளியிட்ட ட்விட்டர் செய்தியில், யமுனை ஆற்றங்கரையில் வசித்து வரும் பல ஏழை குடும்பங்கள் வெள்ளத்திற்கு நிறைய பாதிப்புகளை சந்தித்து உள்ளன. சில குடும்பங்களில், வீட்டில் உள்ள ஒட்டுமொத்த பொருட்களும் நீரில் அடித்து செல்லப்பட்டு விட்டன. அதனால், வெள்ளம் பாதித்த ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ.10 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படுமென கெஜ்ரிவால் அதிரடி அறிவிப்பை வெளியிட்டு உள்ளார். ஆதார் அட்டைகள் உள்ளிட்ட ஆவணங்கள் நீரில் அடித்து செல்லப்பட்டவர்களுக்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். ஆடைகள் மற்றும் புத்தகங்கள் அடித்து செல்லப்பட்ட குழந்தைகளுக்கு பள்ளிகள் சார்பில் அவை வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.